Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk


WEDNESDAY, AUGUST 06, 2025

புதன்கிழமை 06, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 022 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தென்னக்கோனை நீக்க: 177 பேர் ஆதரவு



பொலிஸ்மா அதிபர் டீ.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனை 2002ஆம் ஆண்டின் 5ஆம்இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 17ஆம் வாசகத்தின் பிரகாரம் அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானம் 177 மேலதிக வாக்குகளை பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (05) நிறைவேற்றப்பட்டது. இந்த பிரேரணை எதிர்த்து எவரும் வாக்களிக்கவில்லை. அத்துடன், வாக்களிப்பில் இருந்து ஒரு உறுப்பினர் விலகியிருந்தார்.



ஈழத் தமிழர்களை மோசமாக சித்திரிக்கும்

## ‘கிங்டம்’க்கு தடை விதி

ஈழத் தமிழர்களை மிக மோசமாக சித்திரிக்கும் ‘கிங்டம்’ திரைப்படத்திற்குத் தடை விதிக்க வேண்டும் என வைகோ தெரிவித்துள்ளார்.

கௌதம் தின்னனுரி இயக்கத்தில் விஜய் தேவரகொண்டா, பாக்யஸ்ரீ போர்சே உள்ளிட்ட பலர் நடித்துள்ள திரைப்படம் "கிங்டம்" (kingdom). இப்படம் கடந்த ஜூலை 31ஆம் திகதி தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியானது.

இந்நிலையில், ‘கிங்டம்’ திரைப்படம் குறித்து மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், “நடிகர் விஜய் தேவரகொண்டா நடிப்பில் வெளியான தெலுங்கு திரைப்படமான ‘கிங்டம்’, ஈழத்தமிழர்களை மிக மோசமாக சித்திரித்து காட்டுகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு குடிபெயர்ந்து சென்ற ஈழத்தமிழர்களை அடிமைகள் போலவும், தீண்டத் தகாதவர்களை நடத்துவது போன்று இத்திரைப்படத்தில் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2




## “முன்னாள் கடற்படை தளபதி புலிகளின் பிரதானி அல்ல”



முன்னாள் கடற்படை தளபதி கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவரை அடையாளம் காட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் பிரதானி அழைக்கப்பட்டுள்ளார்.இது முற்றிலும் தவறானது.அரச அதிகாரிகளை மலினப்படுத்தும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுகிறது. என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எம்.பி. நாமல் ராஜபக்ஷ குற்றம்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## “கூட்டாளிகளுக்கு அதிக நன்மை”



சகல இளைஞர் கழகங்களின் சட்டப்பூர்வத்தன்மையையும் இரத்துச் செய்து, புதிய இளைஞர் கழகங்களை தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் செயல்முறை இளைஞர் கழக அமைப்பினது இறையாண்மை ,ஜனநாயக செயல்பாட்டை ஆபத்தில் ஆழ்த்தி, புதிய கட்டளைகள் மூலம் தமது அரசியல் கூட்டாளிகளுக்கு அரசு நன்மையைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியாக தெரிவதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

செம்மணி விவகாரத்தில் சர்வதேச விசாரணைக்கு

# “கோப்ரல் ராஜபக்ஷவை தயார்படுத்துங்கள்”

தேசபந்து தென்னகோனுக்கு எதிராக நீங்கள் கொண்டுவரவுள்ள நீதியைத் தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கொண்டுவர நீங்கள் தயார் இல்லை என தெரிவித்த தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான சிவஞானம் சிறீதரன் இந்த செம்மணி விவகாரத்தில் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை நீங்கள் சர்வதேச விசாரணைக்கு தயார்ப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

தெளிவான மனநிலை உங்களிடம் இல்லை. தேசபந்து தென்னகோனுக்கு மட்டுமல்ல, இங்கு நடந்த தமிழினப் படுகொலைகள் .கட்டமைக்கப்பட்ட இன அழிப்புகளுக்கும் நீதி விசாரணை வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(05) அன்று இடம்பெற்ற பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் பேசுகையில்,



அரசால் பொலிஸ் மா அதிபரான தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது மிகப்பெரும் அநீதிக்கு எதிரானது. மக்கள் பட்ட துயரங்கள்,அனுபவித்த சித்திரவதைகள், இங்கு நடந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களோடு சம்பந்தப்பட்ட ஒரு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரானது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

அவருடைய பதவி நீக்கம் என்பதற்கு அரசு கொண்டு வந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவும் தயார். காரணம் நாமும் இதே துன்பங்களை, சித்திரவதைகளை, சந்தித்த ஒரு இனம் என்ற வகையிலும் தொடர்ச்சியாக இந்த நாட்டிலே பல்வேறுபட்ட பொலிஸ் அராஜகங்களுக்கும் இராணுவ அராஜகங்களுக்கும் முகங்கொடுத்து இன்று வரை வாழ்கின்ற இனம் என்ற அடிப்படையில் இந்த பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றோம். காரணம் நீதி என்பது அனைவருக்கும் சமமானது. சட்டத்துக்கு முன்பாக அனைவரும் சமம் என்றால் இந்த நாட்டில் இருக்கின்ற தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் என்ற எல்லா இனம் சார்ந்தவர்களும் நீதியின் முன் சமமாக மதிக்கப்பட வேண்டும் நியாயாதிக்கம் பேணப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2

## “தென்னக்கோனை நீக்குவது சிறந்த எடுத்துக்காட்டு”



ஆட்கடத்தல் மற்றும் மனித சித்திரவதை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவரும் அடிப்படை மனித உரிமை மீறல் குற்றவாளி என்று உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டவருமான பொலிஸ்மா அதிபரான தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவது எதிர்காலத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டு என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## புதிய எல்லை நிர்ணயக் குழு

புதிய எல்லை நிர்ணயக் குழுவை நியமிக்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் திங்கட்கிழமை (04) அன்று அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான யோசனையை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்தார்.

பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை நிறுவுதல் மற்றும் மீளாய்வு செய்வதற்காக 2012ஆம் ஆண்டு எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவின் ஒருசில விதந்துரைகள் மாத்திரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## யானை தாக்குதலில் தாய் பலி; குழந்தை தப்பியது

கனகராசா சரவணன்

யானை தாக்குதலில் இளம் தாயார் ஒருவர் உயிரிழந்ததுடன் 3 வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழவெட்டுவான் பகுதியில் திங்கட்கிழமை(04) அன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


மகிழவெட்டுவானை சேர்ந்த 35 வயதுடைய ரவிச்சந்திரன் பசுபதி என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## எம்.பிகளின் காப்புறுதி 75% குறைப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான காப்புறுதிக் காப்பீட்டு அனுகூலத்தை ரூபாய் 250,000 ஆக மட்டுப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டுக் காப்புறுதிக் காப்பீட்டை வழங்குவதற்கு பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



## மேக வெடிப்பால்: வீடுகளை அடித்துச் சென்ற பெருவெள்ளம்

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாஷி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை (05) அன்று திடீரென ஏற்பட்ட பெரும் மேக வெடிப்பால் ஒரு கிராமமே மூழ்கியதால், பலர் காணாமல் போயுள்ளனர். இதில் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இப்பகுதியில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மாநில பேரிடர் மீட்புப் படை சம்பவ இடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. கீர் கங்கா நதியின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மேக வெடிப்பால் மிகப் பெரிய வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி கூறுகையில், “தாராலி [உத்தரகாசி] பகுதியில் மேக வெடிப்பு காரணமாக ஏற்பட்ட பெரும் இழப்புகள் குறித்த செய்தி மிகவும் வருத்தமாகவும் வேதனையாகவும் உள்ளது.

இது தொடர்பாக மூத்த அதிகாரிகளுடன் நான் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன், நிலைமை உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## ‘லோகி’ குளத்தில் இளைஞனின் சடலம்

கௌசல்யா

உடபுஸ்ஸல்லாவ பகுதியில் இருந்து தொழிலுக்காக தலவாக்கலை நகருக்கு வந்திருந்த இளைஞன், லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லோகி தோட்டத்தின் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் தனது நண்பருடன் குளிப்பதற்காக அங்கு சென்றிருந்தபோது, குளத்தில் தவறி விழுந்ததன் காரணமாக உயிரிழந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் லிந்துலை பெல்கிரேவியா தோட்ட பகுதியில் தனது உறவினர் வீட்டில் தங்கி இருந்து வேலைக்கு சென்றதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



## சேவலை கடித்து குதறிய பெண் நாய் சுட்டுக்கொலை

தனது சேவல்களில் ஒன்றை கவ்விச் சென்று கடித்துக் கொன்ற ஒரு பெண் நாயை, கோழியின் உரிமையாளர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற சம்பவம், மொனராகலை படல்கும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலிகத்தென்ன பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (03) அன்று இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்ட வீட்டின் அருகே காணப்பட்ட பெண் நாய்க்கு, 4 குட்டிகள் உள்ளன. சந்தேக நபரின் காணியில் சுற்றித் திரிந்த ஒரு சேவலை அந்த நாய் பிடித்து, அதைக் கொன்று குட்டிகளுக்கு எடுத்துச் சென்றுள்ளது.

சந்தேக நபர் சேவலைக் காணாமல் அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலின்போது, கொல்லப்பட்ட சேவல் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் கோபமடைந்த கூலித்தொழிலாளியான 42 வயதான நபர், வீட்டுக்குள் சென்று, துப்பாக்கியை எடுத்து வந்து, பெண் நாயை சுட்டுக் கொன்றுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸூக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கொல்லப்பட்ட பெண் நாயின் உடல் படல்கும்புர கால்நடை மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு பிரேதப் பரிசோதனை நடத்தப்பட்டது. பெண் நாயின் உடலில் மூன்று சன்னங்கள் காணப்பட்டுள்ளன.

நாயைக் கொன்ற நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார், மேலும் அவரைக் கைது செய்ய படல்கும்புர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுனில் திசாநாயக்க விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.



PAGE 1 தொடர்ச்சிகள்

## “முன்னாள்…

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) அன்று இடம்பெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்

மேலும் அவர் பேசுகையில், பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கம் செய்வதற்கான விவாதம்,நபர் பற்றி எமக்கு பிரச்சினையில்லை. ஆனால், அந்த உயரிய பதவி பிரச்சினைக்குரியதாக உள்ளது. இந்த அரசாங்கம் அரச அதிகாரிகளை மலினப்படுத்தும் வகையில் செயற்படுகிறது. முன்னாள் கடற்படை தளபதி கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவரை அடையாளம் காட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வு பிரிவின் பிரதானி அழைக்கப்பட்டுள்ளார்.இது முற்றிலும் தவறானது.

அரச அதிகாரிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் அரசியல் நோக்கத்துடன் செயற்படுகிறது. இதனால் அரச நிர்வாகம் முழுமையாகப் பாதிக்கப்படும். அரசாங்கத்தின் குறுகிய அரசியல் நோக்கத்துக்குப் பாராளுமன்றமும் தற்போது பயன்படுத்தப்படுகின்றது என்றார்.

## “கூட்டாளிகளுக்கு…

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(05) அன்று நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் எதிர்கட்சித்தலைவர் பேசுகையில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 2-11/25/01 மூலம், 2025 மே 23க்கு முன்பு தாபிக்கப்பட்ட சகல இளைஞர் கழகங்களின் சட்டப்பூர்வத்தன்மையையும் இரத்துச் செய்து, புதிய இளைஞர் கழகங்களைத் தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் செயல்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது சகல இளைஞர் கழகங்களும் அரசியல் மயமாக்கலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத்தின் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, அரசியல் நலன்களின் அடிப்படையில் இளைஞர் கழகங்களுக்கு நிறைவேற்று தர உத்தியோகத்தர்களை நியமிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த இளைஞர் கழக அமைப்பினது இறையாண்மை மற்றும் ஜனநாயக செயல்பாட்டை ஆபத்தில் ஆழ்த்தி, புதிய கட்டளைகள் மூலம் தமது அரசியல் கூட்டாளிகளுக்கு நன்மையைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியாக இது தெரிகிறது. எனவே, இது தொடர்பாக அரசாங்கம் இந்த சபையில் விளக்கத்தை வழங்க வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகிறேன்.

இதன்பிரகாரம், பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் இலக்கம் 2-11/25/01 இன் கீழ் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் கீழ், புதிய இளைஞர் கழகங்களைத் தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் நடவடிக்கைகளின்போது, இளைஞர் கழகங்கள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா?

அவ்வாறில்லையெனில், நாட்டில் காணப்படும் பல இளைஞர் கழகங்களில் (களுத்துறை, பொலனறுவை, பதுளை, கேகாலை, கம்பஹா, அம்பாந்தோட்டை, நுவரெலியா, கொழும்பு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில்) நிறைவேற்று தர உத்தியோகத்தர் பதவிகளுக்குத் தனது அரசியல் கூட்டாளிகளை மட்டுமே நியமிக்கும் திட்டத்தை முன்னெடுத்து வருவதானது அரசாங்கம் இளைஞர் கழகங்களை அரசியல் மயமாக்குவதைக் குறிக்காதா? அல்லது, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் 2025.05.16 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் 2025.05.23 க்கு முன்னர் தாபிக்கப்பட்ட சகல இளைஞர் கழகங்களின் சட்டப்பூர்வமான தன்மையையும் இரத்துச் செய்து, புதிய இளைஞர் கழகங்களைத் தாபித்தல் அல்லது மறுசீரமைத்தல் நடவடிக்கையில் அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் யாது? சகல இளைஞர் கழகங்களுக்கும் பொருந்தக்கூடிய நிலையியற் கட்டளைத் தொகுப்பைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முன்வைத்துள்ளதா? அந்த நிலையியற் கட்டளைகள் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்படுமா? தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய நிலையியற் கட்டளைகள் மூலம் இளைஞர் கழகத்தில் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர் பதவியை வகிப்பதற்குக் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் செயற்பாட்டு உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் மாற்றப்பட்டுள்ளதா? இது வெறுமனே தமது அரசியல் கூட்டாளிகளை இளைஞர் கழகங்களின் நிறைவேற்று தரப் பதவிகளுக்கு நியமிப்பதற்கு எடுத்த செயல்முறையல்லவா? இளைஞர் கழக யாப்பை மீறும் செயலாக இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா? என்றார்.

# ‘கிங்டம்’க்கு தடை விதி

தங்கள் தாயகத்தின் இறையாண்மையை மீட்டெடுக்க 30 ஆண்டு காலம் தந்தை செல்வா தலைமையில் அறப்போராட்டத்தையும், 30 ஆண்டு காலம் பிரபாகரன் தலைமையில் மறப்போராட்டத்தையும் நடத்திய ஈழத் தமிழ் மக்கள் அதற்காக கொடுத்த விலை அதிகம். இலட்சக்கணக்கான மக்கள் சிங்கள இனவெறி அரசால் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர்.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் துணையோடு சிங்கள அரசு தமிழ் இனப்படுகொலையை நடத்தியது. பன்னாட்டு நீதிமன்றத்தில் குற்றக்கூண்டில் கொடியவன் ராஜபக்சே உள்ளிட்ட கும்பலை நிறுத்தி தண்டனை வழங்கி நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று தமிழ்த் தேசிய இனம் போராடிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், வீரம் செறிந்த ஈழ விடுதலைப் போராட்டத்தையும், ஈழத் தமிழர்களையும் தவறாகச் சித்திரித்து திரைப்படங்கள் வெளியிட்டு வரலாற்றைச் சிதைக்கின்ற முயற்சி கடும் கண்டனத்திற்குரியதாகும். எனவே தமிழ்நாட்டில் ‘கிங்டம்’ தெலுங்கு திரைப்படம் திரையரங்குகளில் வெளியிடப்பட்டிருப்பதற்குத் தடை விதிக்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

### செம்மணி விவகாரத்தில் சர்வதேச விசாரணைக்கு

# “கோப்ரல் ராஜபக்ஷவை தயார்படுத்துங்கள்”

நாட்டினுடைய சட்ட ஆட்சி நேர்மையானதாக இருக்க வேண்டும். அந்த சட்ட ஆட்சி பாராளுமன்ற ஆட்சியின் ஊடாக ஒரு தீர்ப்பை மக்களுக்கு சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும்.

அந்த வகையில், தேசபந்து தென்னக்கோன் நடந்து கொண்ட முறைக்கும் அவரின் சித்திரவதை கூடங்களுக்கும் அவர் இந்த நாட்டில் செய்த அநியாயங்களுக்கும் தீர்ப்பு கிடைக்க வேண்டும். அதில் நாம் தெளிவாக இருக்கிறோம்.

இந்த நாட்டில் அதிக அளவு துன்ப, துயரங்களை அனுபவித்தவர்கள் தமிழர்கள். 1998ஆம் ஆண்டு சி.எஸ்.யு. என்னை வவுனியாவில் கைது செய்தது. 26 வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பொலிஸாரால் சித்திரவதை உள்ளாக்கப்பட்டு 26 நாட்களின் பின்னர் நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று என்னை விடுதலை செய்தார்கள். 26 நாட்கள் பயங்கரவாத குற்றப்புலனாய்வு பிரிவினரால் மிகக்கொடூரமான பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். என்னைப்போல் இன்னும் எத்தனையோ ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர் சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் வந்த பின்னர்தான் நாம் எமது மக்களைப் பெருந்தொகையில் இழந்தோம். 60000க்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம். பலரின் மரணங்களுக்குக் காரணமாக இருந்துள்ளது. இதை நமது கையில் வைத்திருந்த பொலிஸார் செய்த அநியாயங்கள் பலவுண்டு தென்னகோன் மட்டுமல்ல, இந்த நாட்டில் இருந்த பல பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸார் மிக மோசமாக நடந்து கொண்டார்கள் என்பதற்குப் பல வரலாறுகள் உண்டு. பல படுகொலைகளுக்குக் காரணம் உண்டு.

செம்மணியில் ஞாயிற்றுக்கிழமை (03) வரைக்கும் 155 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. 1ஆம் திகதி நான் செம்மணியைச் சென்று பார்வையிட்டேன்.கடந்த திங்கட்கிழமை ஸ்கேன் செய்யும் இயந்திரம் மூலம் சித்துப்பாத்தி மயானமும் அதனை அண்டிய பகுதிகளும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்நிலையில், இங்கு இன்னும் பல எலும்புக்கூட்டு வயல்கள் இருப்பதாக தகவல்கள் சொல்லியுள்ளன . அவ்வாறானால் இவ்வாறு தமிழர்களுடைய எலும்புக்கூட்டின் தொகுதிகள் வெளிவரக் காரணமாக உள்ள கொலையாளிகள் யார் ?இக் கொலைகளை யார் செய்தார்கள்? தேசபந்து தென்னகோனுக்கு எதிராக நீங்கள் கொண்டுவரவுள்ள நீதியைத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்களுக்குக் கொண்டுவர நீங்கள் தயார் இல்லை. அந்த தெளிவான மனநிலை உங்களிடம் இல்லை. இதில் ஒரு சர்வதேச மேற்பார்வையைக் கொண்டுவாருங்கள் என்று கேட்டால் கூட அரசு அதில் தெளிவில்லாத நிலையில் உள்ளது

மனைவி தனது கடிதத்தில் எனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ சட்டவிரோதமாகத் தண்டிக்கப்படுகின்றார். ஆகவே, செம்மணி தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதில் நான் சாட்சியமாக்கத் தயார் என எனது கணவர் தெரிவித்துள்ளார் என திருமதி விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார் .எனவே தேசபந்து தென்னகோன் மட்டுமல்ல. இங்கு நடந்த தமிழி னப் படுகொலைகள். கட்டமைக்கப்பட்ட இனவழிப்புகளுக்கும் நீதி விசாரணை வேண்டும். ஆகவே, இந்த செம்மணி விவகாரத்தில் சோமரத்ன ராஜபக்ஷவை நீங்கள் சர்வதேச விசாரணைக்கு தயார்ப்படுத்துங்கள். உண்மைகள் வெளியே வரட்டும் அது சினைகள் மக்களுக்கும் நீதியை தருவதாக இருக்கட்டும் என்றார்.

## ‘லோகி’ குளத்தில் இளைஞனின் சடலம்



சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மேக வெடிப்பால்: வீடுகளை அடித்துச் சென்ற பெருவெள்ளம்



அனைவரின் பாதுகாப்புக்காக நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறேன்” என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து இந்திய இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், “ஹர்சிலுக்கு அருகிலுள்ள கீர் காட் பகுதியில் தாராலி கிராமத்தில் ஒரு பெரிய மண்சரிவு ஏற்பட்டது, இதனால் குடியிருப்பு வழியாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஐபெக்ஸ் படையினர் உடனடியாக வரவழைக்கப்பட்டுள்ளனர். சேதத்தின் அளவு கண்டறியப்பட்டு வருகிறது. இந்த இயற்கை பேரிடரின் போது மக்களுக்கு ஆதரவாக இராணுவம் உறுதியாக நிற்கும்" என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இடிபாடுகளுக்குள் சுமார் 10-12 பேர் புதைந்திருக்கலாம் என்று கிராமவாசி ராஜேஷ் பன்வார் தெரிவித்துள்ளார்.

20-25 ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் அவர் கூறயுள்ளார்.

## எம்.பிகளின் காப்புறுதி 75% குறைப்பு

இந்த திட்டம், 2025.10.19ஆம் திகதி ஆரம்பிக்கின்ற காப்புறுதி ஆண்டிலிருந்து ஆரம்பமாகும். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வருடமொன்றுக்கு ஒரு மில்லியன் ரூபாய் உயர்ந்த பட்ச காப்புறுதிக் காப்பீட்டின் கீழ் கூட்டுக் காப்புறுதி முறையை நடைமுறைப்படுத்துவதற்கு 2023.05.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய,கடந்த காலப்பகுதியில் குறித்த காப்புறுதிக் காப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கின்ற போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படுகின்ற ரூபாய் 1000,000 காப்புறுதிக்காப்பீட்டு எல்லையை ரூபாய் 250,000ஆகக் குறைப்பதற்கு ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார்.

அதற்கமைய, 2025.10.19ஆம் திகதி ஆரம்பிக்கின்ற காப்புறுதி ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான காப்புறுதிக் காப்பீட்டு அனுகூலத்தை ரூபாய் 250,000 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## “தென்னக்கோனை நீக்குவது சிறந்த எடுத்துக்காட்டு”

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தை பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) அன்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்

மேலும் அவர் பேசுகையில்,

தேசபந்து தென்னக்கோனின் துர்நடத்தையை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிராக 23 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அந்த குற்றச்சாட்டுக்களை சிறப்பு குழு விரிவாக ஆராய்ந்தது. தேசபந்து தென்னக்கோன் மீது முன்வைக்கப்பட்ட 23 குற்றச்சாட்டுக்களில் 19 குற்றச்சாட்டுக்கள் 38 சாட்சியாளர்களின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு நிரூபிக்கப்பட்டுள்ளன. தேசபந்து தென்னக்கோன் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, நீதிமன்ற வழக்கு விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. ஆட்கடத்தல் மற்றும் மனித சித்திரவதை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களும் தேசபந்து தென்னக்கோன் மீது சுமத்தப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் உயர்நீதிமன்றம் பல தீர்ப்புக்களை வழங்கியுள்ளது. அடிப்படை உரிமை மீறல் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளார். இவரை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்குக் கடந்த அரசாங்கத்தின் ஆட்சியாளர்கள் அரசியலமைப்பு பேரவைக்கு அழுத்தம் பிரயோகித்துள்ளார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்திலும் தேசபந்து தென்னக்கோனின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவிக்கான அதிகாரத்துக்கு அப்பாற்பட்டு அரசியல் நோக்கத்துடன் செயற்பட்டமை பல விடயங்களில் வெளிப்பட்டுள்ளன.அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்திய தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கமும், அதன் பின்னரான அரசாங்கங்களும் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக அவருக்கு சம்பள உயர்வும், பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளன.

காலி முகத்திடல், “கோட்டா கோ கம”, “அலரி மாளிகை மைனா கோ கம” மீதான தாக்குதல் தொடர்பிலும் தேசபந்து தென்னக்கோன் மீது அடிப்படை உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசியல் நோக்கத்துடன் சிவில் பிரஜைகள் மீதான தாக்குதலுக்கு அவர் உதவி வழங்கியுள்ளார். அமைதியான போராட்டத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது தேசபந்து தென்னக்கோன் அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். வன்முறையாளர்களுடன் ஒன்றிணைந்து சிவில் பிரஜைகள் மீது இவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

2023.12.31ஆம் திகதியன்று மாத்தறை வெலிகம டப்ள்யூ 15 ஹோட்டல் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தேசபந்து தென்னக்கோன் குற்றவாளியாக்கப்பட்டுள்ளார். இவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புக்களைக் கருத்திற் கொள்ளாமலே கடந்த அரசாங்கம் இவரை பொலிஸ்மா அதிபராக நியமித்தது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் குற்றவாளி என்று பிரதம நீதியரசர் என்.பி.சூரசேன தலைமையிலான சிறப்புக்குழு ஏகமானதாக அறிவித்துள்ளது. சட்டவிரோதமான செயற்பாட்டுக்கு பொலிஸ்மா அதிபர் பதவியைப் பயன்படுத்தி கட்டளை பிறப்பித்துள்ளார். பல துர்நடத்தையான செயற்பாடுகளுக்கு தேசபந்து தென்னக்கோன் பொறுப்புக்கூற வேண்டும் .எனவே இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 2002 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் (நடவடிக்கை முறை) சட்டத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.



## புதிய எல்லை நிர்ணயக் குழு

பின்னர் 2021ஆம் ஆண்டில் மீண்டும் எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவின் விதந்துரைகள் தொடர்பாக இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குறித்த குழுவின் அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை அந்தந்தப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு சமர்ப்பித்து குறித்த குழுக்களின் விதந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அந்த விதந்துரைகளை மீளாய்வு செய்து விதந்துரைகளுடன் கூடிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காக புதிய எல்லை நிர்ணயக் குழுவொன்றை நியமிக்க அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## யானை தாக்குதலில் தாய் பலி: குழந்தை தப்பியது

குறித்த பிரதேசத்தில் வீட்டின் முற்றத்தில் சம்பவதினமான திங்கட்கிழமை (04) அன்று இரவு 7.00 மணியளவில் தனது 3 வயது பெண் குழந்தையுடன் தாய் இருந்துள்ளார். அப்போது குடிமனைக்குள் உட்புகுந்த யானை அவர்கள் மீது தாக்கியதில் தாயார் சம்பவ இடத்திலே உயிரிழந்ததுடன் குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இதையடுத்து உயிர் தப்பிய குழந்தையை மீட்டதுடன், உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் யானை தாக்குதலில் உயிரிழந்த இளம் தாயின் குடும்பத்துக்கு தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் வவுணதீவு பிரதேச செயலகம் உடனடியாக ஒரு இலட்சம் ரூபாவை இழப்பீடாக வைத்தியசாலையில் வைத்து உறவினர்களிடம் செவ்வாய்க்கிழமை (05) அன்று கையளித்துள்ளனர்.

## வருடாந்த உற்சவ நிகழ்வு







அம்பாறை மாவட்டம் அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலமுனை திராய்க்கேணி கிராமத்தில் அமைந்துள்ள மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு தீமிதிப்பு நிகழ்வுடன் நிறைவு பெற்றது. வருடாந்த உற்சவ நிகழ்வின் ஆரம்பத்தின்போது, பால் கூட பவனி பறவை காவடி போன்ற பல்வேறு மத நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்

– றிபாஸ்

## புனித அன்னம்மாள் தேவாலய வருடாந்த திருவிழா





கற்பிட்டி, தலவில், புனித அன்னம்மாள் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா ஞாயிற்றுக்கிழமை (03) அன்று கற்பிட்டி, தலவில், புனித அன்னம்மாள் தேவாலயத்தில், சிலாபம் ஆயர் வணக்கத்துக்குரிய டான் விமல் ஸ்ரீ ஜயசூரிய அவர்களின் தலைமையில் ஏராளமான பக்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றதுடன், அதனை வெற்றிகரமாக நடத்துவதற்குக் கடற்படை தனது பங்களிப்பை வழங்கியது.

– எம்.யூ.எம்.சனூன்













## 'யவ்ம்-இ-இஸ்தெஹ்சால்' தினம்




இந்தியாவின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு ஜம்மு மற்றும் காஷ்மீரில் ஆகஸ்ட் 5, 2019இல் இந்தியா மேற்கொண்ட சட்டவிரோத மற்றும் ஒரு தலைப்பட்ச நடவடிக்கைகளை நினைவூட்டும் வகையில் 'யவ்ம்-இ-இஸ்தெஹ்சால்' தினம் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகத்தினால் செவ்வாய்க்கிழமை (05) அன்று அனுஷ்டிக்கப்பட்டது.

















---

தனியறையில் எழுதிய

# "நாமலுக்கு சட்டத்தில் தெளிவு இல்லை"

தனியறையில் இருந்து சட்டக்கல்லூரி இறுதி பரீட்சையை எழுதிய நாமல் ராஜபக்ஷ முதலில் சட்ட ஏற்பாடுகளைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டும் அதன் பின்னர் சட்ட ரீதியிலான தர்க்கங்களை முன்வைக்க வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) அன்று இடம்பெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே



அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

குற்றவாளியான பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவதற்கு 2002ஆம் ஆண்டு 05ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அது சட்டவிரோதமானது, பாராளுமன்ற நிலையியல் கட்டளை மீறப்பட்டுள்ளது என்று நாமல் ராஜபக்ஷ எம்.பி. வாதிடுகின்றார்.

தந்தைக்கும், சித்தப்பாவுக்கும் ஏற்றாற்போல் தீர்ப்பளிக்காத காரணத்தால் முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க சட்டவிரோதமான முறையில் பதவி நீக்கப்பட்டதை நாமல் ராஜபக்ஷ அறியாமலிருப்பது வேடிக்கையாகவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பான விவாதம் நடத்தப்படுவதாக நாமல் ஷ குறிப்பிடுகிறார். தேசபந்து தென்னக்கோனின் துர்நடத்தை தொடர்பில் தான் 2002 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விடயத்தைப் பாராளுமன்றத்தில் விவாதிப்பதால் நீதிமன்ற விசாரணைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று சிறப்புக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

தனியறையில் இருந்து சட்டக் கல்லூரி இறுதி பரீட்சையை எழுதிய நாமல் முதலில் சட்ட ஏற்பாடுகளை தெளிவாக கற்றுக்கொள்ள வேண்டும் அதன் பின்னர் சட்ட ரீதியிலான தர்க்கங்களை முன்வைக்க வேண்டும். சிறுபிள்ளைத்தனமாக பேசக்கூடாது என்றார்.

---

# மொத்தமாக 425 பேர் கைது



மனித படுகொலைகள் தொடர்பில் கைது 241 , காயங்களை ஏற்படுத்தியோர் தொடர்பான விசாரணைகளில் 180 பேர், தடை செய்யப்பட்ட விலங்குகளை வேட்டையாடிய குற்றம் தொடர்பில் 4 பேர் என மொத்தமாக 425 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசா காலம் முடிந்த பின்னரும் நாட்டில் தங்கியிருப்போர் மற்றும் கடவுச்சீட்டு ஆவண மோசடி தொடர்பில் இதுவரை 219 வெளிநாட்டுப் பிரஜைகளை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் கைது செய்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (05) வாய்மூல விடை க்கான வினா நேரத்தில் , சுசந்த குமார நவரத்ன எம்.பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சர் ஆனந்த விஜேபால பேசுகையில், தமது விசா காலம் முடிவடைந்துள்ள நிலையிலும் நாட்டில் தங்கியுள்ள நபர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குடிவரவு-குடியகல்வு சட்டத்தின்படி, அவ்வாறு தங்கியுள்ளவர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன அதற்கான பணிப்புரைகள் மேற்படி திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளன

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களாக பொலிஸ் துறை, குடிவரவு-குடியகல்வு திணைக்களம், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுத் தேசிய சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயலகம், தேசிய பொலிஸ் பயிற்சி நிலையம் ஆகியன காணப்படுகின்றன.

அந்த வகையில் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மேற்படி நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை ஸ்ரீலங்கா பொலிஸ் 28, குடிவரவு-குடியகல்வு திணைக்களம்149,அந்த வகையில் பொலிஸ் துறையானது துப்பாக்கிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மனித படுகொலைகள், ஆயுதங்களைப் பயன்படுத்தி தடை செய்யப்பட்ட விலங்குகளை வேட்டையாடுதல் ஆகியவை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்கின்றது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமானது விசா காலம் முடிந்த பின்னும் நாட்டில் தங்கியிருப்போர் தொடர்பில் மற்றும் விசா நிபந்தனைகளைகளுக்கு முரணான வகையில் நாட்டுக்கு வருவோர், கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளுக்காகத் தவறான ஆவணங்களை வழங்குவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

அந்த வகையில், மனித படுகொலைகள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 241, காயங்களை ஏற்படுத்தியோர் தொடர்பான விசாரணைகளில் 180 பேர், தடை செய்யப்பட்ட விலங்குகளை வேட்டையாடிய குற்றம் தொடர்பில் 4 பேர் என மொத்தமாக 425 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களமானது வியட்நாம் பிரஜைகள் 23 பேரை கைது செய்துள்ளது. அந்த வகையில், இரண்டு பாகிஸ்தான் பிரஜைகள், 106 பங்களாதேஷ் பிரஜைகள், 56 இந்தியர்கள், 4 சீனப் பிரஜைகள் 6 தாய்லாந்து பிரஜைகள், 2 பிலிப்பைன்ஸ் பிரஜைகள், புருண்டி 2 , கென்யா 2,ஒரு எத்தியோப்பியப் பிரஜை, ஒரு உகண்டா பிரஜை, ஒரு நேபாள பிரஜை , மூன்று ரஷ்ய பிரஜைகள், ஒரு நெதர்லாந்து பிரஜை, இரண்டு யேமன் பிரஜை, இஸ்ரேல் நான்கு, அவுஸ்திரேலியா 1, இத்தாலி ஒன்று, சூடான் ஒன்று என 219 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் பொலிஸ் துறையில் மனித படுகொலைகள் தொடர்பில் 23 பல்வேறு ரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றார்.

---

# "பாதுகாக்க முயற்சிப்போரின் பின்னணியை அறிவோம்"

மனித உரிமைகள் மீறல் குற்றவாளியான பொலிஸ்மா அதிபரை பாதுகாப்பதற்கு முயற்சிப்பவர்களின் பின்னணியை நாம் அறிவோம். இதற்குரிய பதில் இவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் கிடைக்கும் என்று வெளிவிவகாரத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(05) அன்று இடம்பெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

முன்னாள் பிரதம நீதியரசரைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து வந்து முறையற்ற வகையில் சட்டத்துக்கு விரோதமான முறையில் அவரை பதவி நீக்கியவர்கள் இன்று எம்மை நோக்கிக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஆச்சரியமாகவுள்ளது. நாட்டில் அரசியலமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டத்தின் பிரகாரமே பொலிஸ்மா அதிபரைப் பதவி நீக்குவதற்கான நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்பட்டன. இந்த முறைகேடான, மோசடியான மற்றும் மிலேச்சத்தனமான மனித உரிமைகள் மீறல் குற்றவாளியான பொலிஸ்மா அதிபரைப் பாதுகாப்பதற்கு முயற்சிப்பவர்களின் பின்னணியையும் நாம் அறிவோம். இதற்குரிய பதில் இவர்களுக்கு



எதிர்வரும் காலங்களில் கிடைக்கும்.


சிறைக் கைதி ஒருவரின் அந்தரங்க உறுப்பில் சித்தாலேப தைலத்தைப் பூசி மிகவும் கொடூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கிய மனித உரிமை மீறல் வழக்கில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உயர்நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளார்.

இந்த நபரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டாம் என்று நாட்டில் பல்வேறு தரப்பினர் கடுமையாக வலியுறுத்தினார்கள். மக்களின் எதிர்ப்பை கருத்திற் கொள்ளாமலே கடந்த அரசாங்கம் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்தது.

காலி முகத்திடல் போராட்டக்களத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பொறுப்பாளி .அன்றைய தினம் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தாமலிருந்திருந்தால் பாரிய விளைவுகள் ஏற்பட்டிருக்காது என்றார்.

---

# வாய்ப்புற்று நோயை தடுக்க விழிப்புணர்வு



எம்.எஸ்.எம்.நூர்தீன்

சுகாதார வெகுஜன ஊடக அமைச்சர் வைத்திய கலாநிதி நலிந்த ஜெயதிஸ்ஸவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேகமாக அதிகரித்து வரும் வாய்ப்புற்று நோயைத் தடுக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் செவ்வாய்க்கிழமை (05) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பல் வைத்திய பிரிவின் வழிகாட்டலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் இத்திட்டம் செவ்வாய்க்கிழமை (05) முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தொற்றா நோய் தடுப்பு நிபுணர் வைத்திய கலாநிதி இ.உதயகுமார் தலைமையில் செவ்வாய்க்கிழமை (05) காலை மட்டக்களப்பு பஸ் தரிப்பு நிலையத்தில் குறித்த வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர் முரளீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை முகத்தாடை சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நவீன், மாவட்ட பல் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கோகுலரமணா, மட்டக்களப்பு மாவட்ட புற்றுநோய் விழிப்புணர்வு சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி பேராசிரியர் இ.கருணாகரன், இலங்கை போக்குவரத்து சபை மட்டக்களப்பு சாலை முகாமையாளர் கந்தசாமி ஸ்ரீதரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீனவர்கள் மத்தியில் குறித்த வாய் புற்றுநோய் வேகமாக அதிகரித்து வருவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து வெளியிடங்களுக்கு செல்லும் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்குக் குறித்த வாய்ப்பற்று நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளன.

மாவட்டத்தில் குறித்த வாய்ப்புற்று நோயை கட்டுப்படுத்தும் முகமாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் முரளீஸ்வரன் தெரிவித்தார்.

# ஜனாதிபதி அனுர தலைமையிலான அரசாங்கம் நிரூபிக்க வேண்டும்

“சவால்களை சமாளிப்பதன் மூலம் அவர்களின் ஆளுமை, தலைமைத்துவ திறன்கள் மற்றும் அபிலாஷைகளை மேம்படுத்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பது” என்பது இளைஞர் சேவைகள் மன்றத்தின் நோக்கமாகும்.

இந்த நிறுவனம் இந்த நாட்டின் இளைஞர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. இலங்கையில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இளைஞர் சங்கங்கள் நிறுவப்பட்டன, மேலும் அந்த இளைஞர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு அறிவியல், கலை மற்றும் வணிகம் ஆகிய மூன்று துறைகளிலும் தொழில் பயிற்சி வழங்கப்பட்டது.

இளைஞர் சேவை தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பட்டம் பெற்ற பல்வேறு வல்லுநர்கள் நாடு முழுவதும் அரசு சேவை மற்றும் சுயதொழில் ஆகியவற்றில் இணைக்கப்பட்டனர். இவை அனைத்திற்கும் அடிப்படையாக இருந்த இளைஞர் சேவை சங்கங்கள் அல்லது ‘இளைஞர் கழகங்கள்’, 1979இல் நிறுவப்பட்டது.

இந்த இளைஞர் கழக அமைப்பு, அரசியல், நிறுவன வலிமை மற்றும் பொது சேவையின் அடிப்படை கூறுகளில் இளைஞர் தலைமுறைக்குப் பயிற்சி அளித்தது. கட்சி அரசியல் மயமாக்கல் இல்லாமல் மிதமான அரசியலைப் பயிற்றுவித்த ஒரு அமைப்பாக அந்த சமூக அமைப்பு தொடர்ந்தது.

இந்த நாட்டு மக்கள் மக்கள் விடுதலை முன்னணிக்கு மிகுந்த நம்பிக்கையுடன் வாக்களித்தனர். இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் சங்கங்களை அரசாங்கம் அரசியல் மயமாக்குவது குறித்து இளைஞர்கள் என்ன சொல்கிறார்கள்? தோல்வியடைந்த ஜே.வி.பி. வேட்பாளர்களை இளைஞர் சங்கங்களின் தலைமைப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்ற பிரச்சாரமும் செல்வாக்கும் இப்போதெல்லாம் நடந்து வருகிறது.

வழக்கமாக, தேர்தலுக்குப் பிறகு ஒவ்வொரு அரசாங்கமும், வெற்றி பெற்ற கட்சியின் தோல்வியுற்றவருக்கு ஒரு நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவில் குறைந்தபட்சம் ஒரு பதவியையாவது வழங்குகிறது. அந்த மக்களை மகிழ்விப்பதற்கும், அவர்களைக் கட்சியுடன் மேலும் பிணைப்பதற்கும் இது செய்யப்படுகிறது. இளைஞர் சங்கங்களுக்கு எதிராக இந்த தந்திரோபாயம் பயன்படுத்தப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஒரு நாட்டில் அரசியல் அதிகாரத்தை எந்த அரசாங்கமும் கைப்பற்றினால், அதிகாரங்களைக் கைப்பற்ற வேண்டும். அப்போதுதான் ஓர் அரசாங்கம் நிலையானதாக இருக்கும். இந்த கோட்பாடு எவ்வளவு நெறிமுறையானது என்பதை அரசாங்கம் அடுத்து பரிசீலிக்க வேண்டும். தேசிய இளைஞர் சேவை மன்றம் முழு இலங்கை இளைஞர்களின் உச்ச புகலிடமாகும். அதைத் தேசத்திற்குப் புனிதமாகப் பாதுகாப்பதும் ஆட்சியாளர்களின் கடமை என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

எனினும், இளைஞர் சேவைகள் மன்றத்தையும், இளைஞர் சம்மேளன பிரதேச சம்மேளனங்களையும் மக்கள் விடுதலை முன்னணியின் நிரந்தரக் கிளையாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அது அவ்வாறில்லை என்பதைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிரூபிக்கவேண்டும். இல்லையேல், கடந்தகால அரசாங்கங்களின் அரசியல்யொட்டியே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் பயணிக்கிறது என்ற குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதாக அமையும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk








## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவரிடமும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, அன்பான நட்பின் வழியைக் கைப்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்கலாம் என்பது முடியாத காரியமாகும். வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைக்க, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், ‘நான்’ என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசும்போது அது ஏற்படும்.

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கே கேடானவை, பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை வணங்கும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

அரசியல்வாதிகளுக்கு

# ஓய்வூதியம் வழங்க வேண்டுமா?

அரசாங்கத்துக்கு எதிராக பாரியதொரு எதிர்ப்பலையை உருவாக்க எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகளை இரத்துச் செய்ய அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கையை பாவித்து இவ்வாறானதோர் அலையை உருவாக்க எதிர்க்கட்சிகள் இப்போது முயல்வதாக தெரிகிறது.

தேசிய மக்கள் சக்தி பதவிக்கு வந்தவுடன் நாட்டில் பாரியதொரு மாற்றம் ஏற்படும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆயினும் பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்றிலிருந்து நாடு சிறிது சிறிதாக மீளும் நிலையில் உள்ளதால் அவ்வாறானதொரு மாற்றம் ஏற்படவில்லை.

மக்களின் இந்த ஏமாற்றத்தைப் பாவித்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பொய்யர்கள் என்றதோர் அபிப்பிராயத்தை உருவாக்க எதிர்க்கட்சியினர் எடுத்த முயற்சி ஓரளவு வெற்றி பெற்றமை உண்மை தான். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளில் அது தெரியவந்தது. அதன்படி, 2022இல் இடம்பெற்ற ‘அரகலய’ என்றழைக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தைப் போன்றதொரு நிலைமையை எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்த போதிலும் அந்தளவுக்கு நாட்டின் நிலைமை மோசமானதாக இல்லை.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை ரத்து செய்யும் சட்டமும் அக்கட்சிகளுக்குக் கைகொடுக்குமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி இந்த சிறப்புரிமை ரத்து செய்யும் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இது வரை முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அவர்களின் விதவைகளுக்கும் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள், மாதாந்த கொடுப்பனவுகள், அலுவலக கொடுப்பனவுகள் உத்தியோகபூர்வ போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் இரத்து செய்யப்படவுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளின் விதவைகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியமும் அச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் இரத்து செய்யப்படும்.

எனினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியம் இச்சட்ட மூலத்தின் மூலம் இரத்து செய்ய முடியாது. ஏனெனில், ஜனாதிபதிகளின் ஓய்வூதியமானது சாதாரண சட்டமொன்றின் மூலமன்றி அரசியலமைப்பின் மூலமே உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களது ஓய்வூதியத்தை இரத்து செய்வதாக இருந்தால் அதற்காக அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வர வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு 158 பாராளுமன்ற உறுப்பினர்களின் (மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேல்) ஆதரவு இருப்பதால் அதனையும் அரசாங்கத்தால் மிக எளிதில் நிறைவேற்ற முடியும்.

அரசாங்கம் இச்சட்ட மூலத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் மஹிந்தயையே குறி வைத்துள்ளது என்று அம்முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மனோஜ் கமகே கூறியிருந்தார். மஹிந்தவுக்கு வழங்கப்பட்டு இருக்கும் உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக அண்மையில் எழுந்த சர்ச்சையை அடிப்படையாகக் கொண்டு சில வேளை அவர் இவ்வாறு கூறியிருக்கலாம்.

மஹிந்தவுக்கு கொழும்பு விஜேராம மாவத்தையில் வழங்கப்பட்டுள்ள வீடு, 350 கோடி ரூபாய் பெறுமதியானது என அரச மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது என்றும், அது அமைந்துள்ள கொழும்பில் மிகவும் பெறுமதி வாய்ந்த பிரதேசத்தில் உள்ள ஒரு ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் இன்னமும் மதிப்பிடப்படவில்லை என்றும் அரச தலைவர்கள் கூறினர்.

நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியைச் சந்தித்த காலத்தில் ராஜபக்ஷ 47 கோடி ரூபாய் பொதுப் பணத்தைச் செலவழித்து மற்றொரு வீட்டையும் இணைத்து அவ்வீட்டைப் புதுப்பித்து உள்ளதாகவும், அதன் படி 30,000 சதுர அடி பரப்பளவு கொண்ட அவ்வீட்டை 46 இலட்சம் ரூபாய் மாத வாடகைக்கு விட முடியும் என மதிப்பீட்டுத் திணைக்களம் மதிப்பிட்டுள்ளதாகவும் அரசாங்கம் மேலும் குறிப்பிடுகிறது.

இரண்டு பேர் கொண்ட ஒரு சிறிய குடும்பம் இவ்வளவு பாரிய அரச விடுதி ஒன்றை வைத்திருப்பது பொதுச் சொத்தை அபகரிப்பதாகும் என்று வாதிடும் ஜனாதிபதி அனுரகுமார அவ்வீட்டை அரசாங்கத்திடம் கையளிக்குமாறும் அதற்குப் பதிலாக சாதாரண வீடொன்றை அவருக்கு வழங்க முடியும் என்றும் கூறியிருந்தார்.

எழுத்து மூலமாக அறிவித்தால் மஹிந்த அவ்வீட்டிலிருந்து வெளியேறுவார் என்று பொதுஜன முன்னணி அதற்குப் பதிலளித்திருந்தது. ஆனால், அரசாங்கம் அவ்வாறு அறிவிக்கவில்லை. அதற்குப் பதிலாக முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருக்குமான இந்த சட்ட மூலத்தை வர்த்தமானியில் பிரசுரித்துள்ளது.

அரசாங்கத்தின் கருத்தை மறுக்கும் பொதுஜன முன்னணியினர் புலிகளின் பிடியிலிருந்து நாட்டை பாதுகாத்த தலைவர், இது போன்றதொரு அரச வீட்டை வைத்திருக்கத் தகுதி பெற்றவர் என்றும் அவரது பாதுகாப்புக்கு அது அத்தியாவசியமானது என்றும் வாதிடுகின்றனர். எனவே, இந்த வர்த்தமானி அறிவித்தலைப் பயன்படுத்தி அவர்கள் மஹிந்த மீது அனுதாப அலை ஒன்றை உருவாக்கி அரசாங்கத்தின் இந்த முயற்சியை முறியடிக்க முற்படலாம்.

இரு சாராரின் வாதங்களின் நியாயத்தன்மை எவ்வாறாக இருந்தாலும், நாட்டின் அரசியல் கலாசாரம் மாற வேண்டும் என்றும் அரசியலானது பொதுச் சொத்தை கொள்ளையடிக்கும் ஓர் உத்தியாகவோ, பணம் சம்பாதிக்கும் தொழிலாகவோ இருக்கக் கூடாது என்றும் அது மக்கள் நலனுக்காகத் தியாக சிந்தையுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பணியென்றும் மக்கள் விடுதலை முன்னணி பல தசாப்தங்களாக வலியுறுத்தி வருகிறது. அதன் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியும் பெரும்பாலும் அந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. எனவே, இச்சட்ட மூலமானது மஹிந்தவையோ மற்றுமொரு தலைவரையோ குறி வைத்து கொண்டுவரப்பட்டது என்று கூறுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

மக்கள் பிரதிநிதிகளாகக் கடமையாற்ற முன்வந்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம், ஏனைய சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகளை இரத்து செய்வதாகத் தேசிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதி தேர்தலின்போதும், பொதுத் தேர்தலின்போதும், வாக்குறுதி அளித்தது. அதனை அப்போது எந்தவோர் அரசியல்வாதியோ அரசியல் கட்சியோ எதிர்க்கவில்லை. எனவே, அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவது மக்கள் ஆணையுமாகும்.

அத்தோடு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை இரத்து செய்யக் கோரி தாம் பாராளுமன்றத்தில் தனி நபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா வித்தானகே கடந்த நவம்பர் மாதம் கூறியிருந்தார். அதனையும் எவரும் எதிர்க்கவில்லை.

அவர் அவ்வாறானதொரு பிரேரணையை முன்வைக்காத போதிலும், ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அந்நோக்கத்திற்காகக் கடந்த பெப்ரவரி மாதம் தனி நபர் பிரேரணை ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதனையும் எவரும் எதிர்க்கவில்லை.

ஆனால், இப்போது அக்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சலுகை ரத்து செய்யும் சட்டங்களைக் கொண்டு வருவதை எதிர்க்க முற்பட்டுள்ளனர். ரவி கருணாநாயக்க மேற்படி தனி நபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்த போதிலும் அவரது கட்சித் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணிலும் மற்றொரு முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து ஜனாதிபதிகளின் சலுகைகளை இரத்து செய்வதற்கான மேற்படி சட்ட மூலத்தை எதிர்த்து சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக, சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டு இருந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கக் கூடாது, ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று ரணில் கூறுகிறாரா? அது என்ன நியாயம்? இந்தப் பிரச்சினை அரசியல் கட்சிகளின் சித்தாந்த செல்வாக்கிலிருந்து விடுபட்டு நடுநிலையாகவும் நியாயமாகவும் அணுக வேண்டியதொன்றாகும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதிகளுக்கு சம்பளம் மற்றும் சில கொடுப்பனவுகளை வழங்குவதை எவரும் எதிர்க்க முடியாது. அவர்கள் அவற்றைப் பெறாவிட்டால் அப்பதவிகளின் மூலம் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்ற முடியாமல் போகலாம். ஆனால், அப்பதவிகளைப் பாவித்து பொதுப் பணத்தைச் சூறையாடலாமா? வருமானம் பெறுவதற்கான தொழிலாக அரசியலைக் கருதலாமா? ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் சட்டமியற்றுகிறார்கள் அப்பதவிகள் தொழில்களாக மாறினால், அவர்கள் தமது நலன்களை முன்னிலைப்படுத்தி சட்டமியற்றி கொள்ள மாட்டார்களா? அதுவே இது வரை நடைபெற்றது.

மஹிந்த தமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி 350 கோடி ரூபாய் பெறுமதியான வீட்டை வைத்திருக்கிறார். மைத்திரிபாலவும் அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் கொழும்பு பஜட் வீதியில் அமைந்துள்ள பாரிய மாளிகை ஒன்றை வாழ்நாள் முழுவதுமாக வைத்திருக்கத் தாமே தலைமை தாங்கும் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றார். ஓரிரு வாரம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சமன் ரத்னப்பிரிவுக்கும் பல கோடி ரூபாய் பெறுமதியான வாகனமொன்றுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது.

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பல முறை இந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்கிறார்கள். தமக்கு வாகனம் விலை கொடுத்து வாங்கப் பண வசதி இல்லாவிட்டால் அந்த வாகன அனுமதிப் பத்திரத்தைப் பல கோடி ரூபாய்க்கு விற்றுக் குறைந்த விலைக்கு வாகனம் ஒன்றை வாங்கி மிகுதியை சேமிக்கிறார்கள். இது அதிகார துஷ்பிரயோகமாகும். ஐந்து வருடம் பாராளுமன்றத்தில் இருந்தால் ஒருவருக்கு உடனே ஓய்வூதியம் கிடைக்கிறது. அரச ஊழியர்களுக்குப் போல் அதற்கு வயதெல்லை இல்லை.

மறுபுறத்தில், அதிகாரத்தைப் பாவித்து சட்டப்பூர்வமாகவும் சட்ட விரோதமாகவும் பணம் சம்பாதிக்காது முழு நேர அரசியல்வாதியாக ஒருவர் பல வருடங்கள் பாராளுமன்றத்தில் நேர்மையாக இருந்தால் அவரது இறுதிக் காலம் அவருக்குக் கஷ்ட காலம் ஆகலாம். எனவே, மக்களுக்காக சேவை செய்ய அரசியலுக்கு வந்தோம் என்று கூறும் அரசியல்வாதிகளுக்கு சம்பளம் வழங்கினாலும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய சலுகைகளை நன்றாக ஆராய்ந்தே வழங்க வேண்டும்.

## கடிதங்கள்

### கால்வாய் மற்றும் வீதி பிரச்சனையால் மக்கள் பாதிப்பு

ஹட்டன், கொட்டகலை மேஃபீல்ட் தோட்டத்திற்கு செல்லும் வீதி, புனரமைக்கப்படாமல் கடுமையாக சேத மடைந்துள்ளதால் குறித்த தோட்டத்தில் வசிக்கும் சுமார் 1,500 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தோட்டத்திற்குச் செல்வதற்கான ஒரே வீதி 4.5 கிலோ மீட்டர் தூரம் கொண்ட இப் பாதை மாத்திரம் என்பதுடன், அதில் 1 கிலோ மீட்டர் தூரம் 2015ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3.5 கிலோ மீட்டர் தூரம் சரி செய்யப்படாமல் வீதி மிகவும் மோசமாக நிலையில் குண்டும் குழியுமாக உள்ளது,

இதனால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், ஆசிரியர்கள் உட்பட பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த தோட்டத்தின் அருகில் உள்ள கால்வாய் பல ஆண்டுகளாக அகலப்படுத்தப்படாமல் இருப்பதால் மழை நாட்களில் கால்வாய் நிரம்பி வெள்ளம் ஏற்படுவதாக தெரிவிக்கின்றதுடன், குறித்த கால்வாய் அகலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தோட்ட மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரஞ்சித் ராஜபக்ஷ



# குழந்தைகளின் உலகம் நமது கைகளில்




பிரியங்கா தர்மராசா,
உளவியல் துறை மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.




“இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்” என்பது வெறும் வார்த்தைகளல்ல, அது நம் எதிர்காலத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஒவ்வொரு குழந்தையும், திறக்கப்படாத பொக்கிஷப் பேழை போல, அளவற்ற சாத்தியக்கூறுகளையும், கனவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளனர். அவர்களின் சிரிப்பு ஒரு பூவின் வாசனை போல் நம்மை புத்துணர்ச்சியடையச் செய்கிறது. அவர்களின் குதூகலம், இருண்ட நாட்களிலும் வெளிச்சம் பாய்ச்சும் ஒரு கலங்கரை விளக்கு. ஆனால், இந்தக் கோடைக்கால பூக்கள் வாடிவிடாமல் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம் ஒவ்வொருவர் மீதும் உண்டு. “ஆழம் அறியாமல் காலை விடாதே” என்பது பெரியோர் வாக்கு. அதுபோல், குழந்தைகளின் உலகத்தின் ஆழத்தை நாம் உணர்ந்தால் மட்டுமே, அவர்களுக்குப் பாதுகாப்பானதொரு சூழலை உருவாக்க முடியும். உடல்ரீதியான காயங்கள் மட்டுமல்ல, “சொல்லும் அடியும் பட்ட இடத்தில் நிற்கும்” என்பது போல, வார்த்தைகளால் ஏற்படும் வடுக்களும், மனரீதியான பாதிப்புகளும் குழந்தைகளின் உள்ளத்தில் ஆழமாகப் பதிகின்றன. ஒரு குழந்தையின் மனதைக் காயப்படுத்துவது, ஒரு மெல்லிய பட்டாம்பூச்சியின் இறக்கையை ஒடிப்பது போன்றது. அதன் விளைவுகள் வாழ்நாள் முழுவதும் தொடரலாம்.

குழந்தைகள்... அவர்கள் வெறும் சிறு உருவங்கள் அல்ல, நாளை பூக்கும் மலர்கள், பிரகாசமான எதிர்காலத்தின் நம்பிக்கைகள். அவர்களின் சிரிப்பும், சுறுசுறுப்பும், கேள்விகளும் நம் உலகிற்கு வண்ணங்களைச் சேர்க்கின்றன. ஆனால், இந்த வண்ணமயமான உலகிற்குள், பாதுகாப்பற்ற சூழல் எனும் கருமேகம் படர்ந்து விடாமல் காப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும்.

இன்றைய நவீன உலகில், குழந்தைகளின் உலகம் பல சவால்களை எதிர்கொள்கிறது. இணையத்தின் அச்சுறுத்தல்கள், சமூக ஊடகங்களின் தாக்கம், அல்லது கவனக்குறைவால் ஏற்படும் விபத்துகள் என பல வடிவங்களில் ஆபத்துகள் தலைதூக்குகின்றன. ‘வரும் முன் காப்பதே சிறந்தது’ என்பது போல, இந்த ஆபத்துகளை முன்கூட்டியே அறிந்து, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஒவ்வொரு சமூக உறுப்பினரும் கண்கலங்காத விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். “சிறு துரும்பும் பல் குத்த உதவும்” என்பது போல, நமது சிறுசிறு செயல்களும் குழந்தைகளின் பாதுகாப்பிற்குப் பெரிய அளவில் உதவும். ஒரு குழந்தையின் முகத்தில் ஒரு சிறு அச்சத்தைக் கண்டால், அல்லது அதன் நடவடிக்கைகளில் மாற்றத்தைக் கண்டால், “கல்லுக்குள் ஈரம்” என்பது போல், அது ஏதோ ஒரு பிரச்சனையால் ஏற்பட்டிருக்கலாம் என்பதை உணர்ந்து விசாரிக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு “நல்ல தொடுதல், கெட்ட தொடுதல்” பற்றிக் கற்றுக்கொடுங்கள். தங்கள் மீது நிகழும் தவறுகளைப் பற்றிப் பேசுவதற்கு அவர்களுக்குத் தைரியம் அளியுங்கள். அவர்கள் பேசுவதற்கு ஒரு காதும், புரிந்துகொள்வதற்கு ஒரு மனதும் அவர்களுக்குத் தேவை. அவர்களின் பாதுகாப்பு என்பது ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் அடிப்படையாகும். ஒவ்வொரு குழந்தையும் அன்பையும், பாதுகாப்பையும் பெற முழு உரிமை உண்டு. அந்த உரிமையை உறுதி செய்வது நம் அனைவரின் கடமை. இந்த இளம் தளிர்களைப் பாதுகாக்கும் புனிதப் பணியில் நாம் அனைவரும் ஒன்றிணைவோம், நமது எதிர்கால சந்ததிக்கு ஒரு பாதுகாப்பான, மகிழ்ச்சியான உலகத்தைப் பரிசளிப்போம்!.

குழந்தைகளின் உலகம், ஒரு களிமண் போல். அதை நாம் எப்படி செதுக்குகிறோமோ, அப்படியே உருவாகும். அன்பும், பாதுகாப்பும், அரவணைப்பும் நிறைந்த ஒரு உலகத்தை அவர்களுக்குப் பரிசளிப்போம். ஒவ்வொரு குழந்தையும், சுதந்திரமாகச் சுவாசிக்கவும், கனவு காணவும், வளரவும் உரிமை உண்டு. அந்த உரிமையை நிலைநாட்டுவோம். “பூமி தாங்கும் பாரம்”, ஆனால் இந்த பாரம் ஒரு சுகமான பாரம். குழந்தைகளின் உலகம் நமது கைகளில், அதைப் பொக்கிஷம் போல் பாதுகாப்போம்!.

---




சயந்தினி ஆனந்தராசா
உளவியல் சிறப்புக்கலை மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.


## குழந்தைப்பருவ வன்முறையும் உளவியல் பாதுகாப்பும்:

# சிதைந்த சிறகுகள்



குழந்தைப் பருவம் என்பது வண்ணமயமான கனவுகளாலும் நிபந்தனையற்ற அன்பாலும் பாதுகாப்பான சூழலாலும் நிரம்ப வேண்டிய ஒரு காலகட்டம். ஆனால் சில குழந்தைகளின் வாழ்வில் இந்தக் கனவுகள் சிதைந்து சிறகுகள் முறிந்த பறவைகளாய் அவர்கள் தவிக்க நேரிடுகிறது. குழந்தைப்பருவ வன்முறை என்பது உடல் ரீதியான தாக்குதல்கள், பாலியல் துஷ்பிரயோகம், உணர்வுப்பூர்வமான புறக்கணிப்பு அல்லது அச்சுறுத்தல்கள் எனப் பல வடிவங்களில் ஒரு குழந்தையின் உலகத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் ஒரு கொடிய விஷயம். ஒரு பூ மலர்வதற்கு முன்பு கசக்கப்படுவதைப் போல, குழந்தைகளின் மென்மையான உள்ளமும், நம்பிக்கைகளும் வன்முறையால் சிதைக்கப்படும்போது, அதன் ஆழமான வடுக்கள் வாழ்நாள் முழுவதும் அவர்களைப் பின்தொடர்கின்றன.

“சிறு துரும்பும் பல் குத்த உதவும்” என்பதுபோல, ஒரு சிறு புறக்கணிப்பு கூட குழந்தைகளின் மனதில் பெரிய காயங்களை ஏற்படுத்தலாம். ஆனால் குழந்தைப் பருவ வன்முறை என்பது துரும்பல்ல அது ஒரு பெரும் சுனாமியாகக் குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சிப் பாதையையும் அச்சுறுத்துகிறது. உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படும் குழந்தைகள், மனச்சோர்வு, பதட்டம், தூக்கமின்மை, பசியின்மை போன்ற உடனடி அறிகுறிகளைக் காட்டலாம். ஒரு குழந்தையின் சிரிப்பு மறைந்து விழிகளில் பயமும் விரக்தியும் குடியிருக்கும். “உள்ளத்தில் இருப்பதை அள்ளித் தெளிக்கும் முகம்” என்பார்கள். பாதிக்கப்பட்ட குழந்தைகளின் முகமும் நடவடிக்கைகளும் அவர்களுக்குள் புதைந்துள்ள வலிகளை அப்பட்டமாகப் பிரதிபலிக்கும். ஆனால் பல சமயங்களில் இந்தக் குமுறல்கள் புறக்கணிக்கப்பட்டு “குழந்தை அப்படித்தான், பிடிவாதக்காரன்” என்று தவறாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன.

பிரபல உளவியலாளர் எரிக் எரிக்சன் (Erik Erikson), மனித வளர்ச்சி எட்டு நிலைகளில் நடைபெறுவதாகக் கூறுகிறார். இவற்றில் குழந்தைப்பருவ நிலைகள் (நம்பிக்கை எதிர் அவநம்பிக்கை, சுயாட்சி எதிர் வெட்கம் மற்றும் சந்தேகம், முயற்சி எதிர் குற்ற உணர்வு) மிகவும் முக்கியமானவை. குழந்தைப்பருவ வன்முறை இந்த வளர்ச்சி நிலைகளின் அடிப்படையையே அசைத்துப் போடுகிறது. ஒரு குழந்தை தனது ஆரம்பகால வாழ்க்கையில் பாதுகாப்பின்மையையும், அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளும்போது மற்றவர்கள் மீதான நம்பிக்கையை இழக்கிறது. அதன் விளைவாக உலகில் உள்ள அனைத்தையும் சந்தேகக் கண்ணோட்டத்துடன் பார்க்கத் தொடங்குகிறது. இது அவர்களின் சமூகத் தொடர்புகளையும், உறவுகளையும் பெருமளவில் பாதிக்கிறது. “நம்பி கெட்டவன் உண்டோ? நளினமாகப் பேசியும் நஞ்சை உள்ளே வைத்தவன் யார்?” என்பதுபோல சில நேரங்களில் நம்பிக்கைக்குரியவர்கள் வடிவிலேயே வன்முறை நிகழும் போது குழந்தைகள் யார் மீதும் நம்ப முடியாத மனநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

வன்முறையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெரும்பாலும் குறைந்த சுயமரியாதையுடனும், குற்ற உணர்வுடனும் வாழ்கிறார்கள். “தான் செய்தது ஏதோ தவறுதான், அதனால்தான் தண்டிக்கப்பட்டோம்” என்று அவர்கள் தவறாகக் கருதுகிறார்கள். இது அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சியையும், திறமைகளை வெளிப்படுத்துவதையும் தடுக்கிறது. மேலும் கோபம், ஆக்ரோஷம், அல்லது அதீத உள்வாங்கல் போன்ற நடத்தைக் கோளாறுகளும் இவர்களிடம் காணப்படலாம். சில சமயங்களில் அவர்கள் எதிர்காலத்தில் வன்முறையாளர்களாகவோ அல்லது மீண்டும் பாதிக்கப்பட்டவர்களாகவோ மாறும் அபாயமும் அதிகரிக்கிறது. “இளமையில் கல்விகற்காது மூப்பின்பம் தேடுபவன் துன்பப்படுவான்” என்பதுபோல இளமையில் பெற்ற வன்முறை அனுபவங்கள் பிற்காலத்தில் பல்வேறு உளவியல் சிக்கல்களுக்கு அடித்தளமாக அமைகின்றன.

குழந்தைப்பருவ வன்முறையைத் தடுப்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் பாதுகாப்பு அளிப்பதும் ஒரு சமூகத்தின் மிக முக்கியக் கடமையாகும். “அறம் செய்ய விரும்பு” என்ற ஆத்திச்சூடி வரிகளுக்கேற்ப, ஒவ்வொரு தனிமனிதனும், சமூக அமைப்புகளும் குழந்தைகளின் பாதுகாப்புக்குக் குரல் கொடுக்க வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், மற்றும் சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் குழந்தைகளின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஒரு குழந்தை திடீரென பயப்படுவது, தனிமை விரும்புவது, பள்ளிக்குச் செல்ல மறுப்பது போன்ற அறிகுறிகள் தென்பட்டால், அது உதவிக்கான அழுகுரலாக இருக்கலாம். “துரும்பு ஆனைக்கு உதவாது” என ஒரு பழமொழி உண்டு, ஆனால் இந்த விஷயத்தில் ஒரு சிறு சந்தேகம் கூட ஒரு குழந்தையின் வாழ்க்கையைக் காப்பாற்றும்.

உளவியல் நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், மற்றும் அரசு நிறுவனங்கள் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம். குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவது, பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உளவியல் ஆலோசனை மற்றும் சிகிச்சை வழங்குவது ஆகியவை மிக முக்கியமான நடவடிக்கைகள். அறிஞர் சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud), குழந்தைப்பருவ அனுபவங்கள் ஒருவரின் ஆளுமையின் அடித்தளத்தை அமைப்பதாகக் கூறுகிறார். எனவே இந்த அடித்தளம் ஆரோக்கியமானதாக இருப்பதை உறுதி செய்வது எதிர்கால சந்ததியினரின் மனநலத்திற்கும், சமூகத்தின் நிலைத்தன்மைக்கும் இன்றியமையாதது.

குழந்தைப் பருவ வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் சிகிச்சை மிகவும் அவசியம். சிறுவர் உளவியல் நிபுணர்கள் (Child Psychologists), ஆற்றுப்படுத்துநர்கள் (Counselors), மற்றும் சமூகப் பணியாளர்கள் (Social Workers) குழந்தைகளின் மனதிற்குள் சென்று அவர்கள் அனுபவித்த வலிகளைப் புரிந்துகொண்டு அதிலிருந்து மீள அவர்களுக்கு உதவுகிறார்கள். “ஆழம் தெரியாமல் காலை விடாதே” என்பதுபோல், குழந்தைகளின் மனதை அணுகும்போது மிகுந்த கவனமும், பொறுமையும் தேவை. விளையாட்டுச் சிகிச்சை (Play Therapy), கலை சிகிச்சை (Art Therapy), கதை சொல்லல் (Storytelling) போன்ற நுட்பங்கள் குழந்தைகளின் மனதை இலகுவாக்கி, வெளிப்படையாகப் பேசவும், தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவும் உதவுகின்றன.

முடிவாக, “உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு” என்பதுபோல, குழந்தைப்பருவ வன்முறையிலிருந்து மீண்டு வருவது ஒரு மறுபிறப்பு போன்றது. சிதைந்த சிறகுகளுடன் வாழும் குழந்தைகளுக்கு நம்பிக்கையின் ஒளியைக் காட்டுவதும், அவர்களுக்குப் பறக்க மீண்டும் சிறகுகளை அளிப்பதும் நமது அனைவரின் பொறுப்பு. குழந்தைகளின் சிரிப்புதான் ஒரு சமூகத்தின் உண்மையான செல்வம். அந்தச் செல்வம் பாதுகாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் அன்போடும், அரவணைப்போடும் வளர, பாதுகாப்பானதொரு சூழலை உருவாக்குவது நம் கடமை. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பூர்வகுடித் தத்துவத்திற்கேற்ப, ஒவ்வொரு குழந்தையின் பாதுகாப்பும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் சிதைந்த சிறகுகளுடன் தவிக்கும் குழந்தைகள் மீண்டும் வானில் சுதந்திரமாகப் பறக்கும் நாட்கள் உருவாகும்.

மாஸ்கோ

# “அணு ஆயுதம் குறித்து பேசும்போது மிகுந்த எச்சரிக்கைத் தேவை”

அணு ஆயுதம் குறித்து பேசும்போது மிகுந்த எச்சரிக்கை தேவை என்று கிரம்ளின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் ராணுவ நடவடிக்கை, அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகளுக்கு இடையேயான போராக மாறக்கூடும் என ரஷ்ய முன்னாள் அதிபர் திமித்ரி மெத்வதேவ் கூறியது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், இரண்டு (அணு ஆயுத) நீர்மூழ்கிக் கப்பல்களை பொருத்தமான பகுதிகளுக்கு நகர்த்த தான் உத்தரவிட்டிருப்பதாக கடந்த 1ஆம் திகதி தெரிவித்தார்.

இந்நிலையில், இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய கிரம்ளின் செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ், “இதன் மூலம், அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் போர் கடமையில் உள்ளன என்பது தெளிவாகிறது. இது ஒரு தொடர் செயல்முறை. இதுதான் முதலில் கவனிக்கத்தக்கது.



பொதுவாக இதுபோன்ற சர்ச்சைகளில் நாங்கள் ஈடுபட விரும்ப மாட்டோம். எனவே, இது குறித்து எந்த கருத்தும் தெரிவிக்க நாங்கள் விரும்ப மாட்டோம். அதேநேரத்தில், அணு ஆயுதம் குறித்துப் பேசும்போது அனைவரும் மிக மிக கவனமாகப் பேச வேண்டும்.” என தெரிவித்தார்.

ட்ரம்ப்பின் கருத்து பதற்றத்தை அதிகரித்துள்ளதாக ரஷ்யா பார்க்கிறதா என்ற கேள்விக்குப் பதில் அளித்த திமித்ரி பெஸ்கோவ், “எந்த ஒரு பதற்ற அதிகரிப்பு குறித்தும் நாங்கள் இப்போது பேசவில்லை. மிகவும் சிக்கலான, மிகவும் பதற்றம் தரும் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. பலரும் இது குறித்து உணர்ச்சிவசப்படுகின்றனர்” என கூறினார்.

மெத்வதேவை கிரம்ளின் எச்சரிக்க முயன்றதா என்ற கேள்விக்கு, “ஒவ்வொரு நாட்டிலும் தலைவர்கள் நடக்கும் நிகழ்வுகள் குறித்து வெவ்வேறு கண்ணோட்டங்களை, வெவ்வேறு அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர், மிக மிக கடுமையான மனநிலை கொண்ட பலர் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இருக்கிறார்கள். இது எப்போதும் இப்படித்தான்.

ஆனால், முக்கிய விஷயம் என்னவென்றால், ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கை அரசாங்கத்தின் தலைவர் அதாவது அதிபர் புதினால்தான் வகுக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும்” என குறிப்பிட்டார்.

நியூயோர்க்

# “ஐ.நா. அறிக்கைகளை யாரும் படிப்பதில்லை”



உலக நாடுகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும், செலவுகளை குறைப்பதற்கும் வழிகளைத் தரும் வகையில் தயாரிக்கப்படும் ஐ.நா. சபையின் அறிக்கைகள் அதிகம் படிக்கப்படுவதில்லை என்று அந்த சபையின் பொதுச் செயலர் அனடோனியோ குட்டரெஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டு ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஐ.நா. சபை, 240 அமை ப்புகளை உள்ளடக்கிய 27,000 கூட்டங்களை கடந்த ஆண்டு நடத்தியது. இது தொடர்பாக, 1,100 அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆனால், இந்த அறிக்கைகள் பரவலாக படிக்கப்படவில்லை.

ஐ.நா. பொதுச்சபை அல்லது பாதுகாப்பு சபை போன்ற அமைப்புகளால் வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான அறிக்கைகளை, ஊழியர்கள் தீவிர கவனம் செலுத்தி தயாரிக்கின்றனர்.

இதில், 5 சதவீத அறிக்கைகள் மட்டுமே அதிகபட்சமாக 5,500 முறை பதிவிறக்கம் செய்யப்பட்டு உள்ளன.

அதேநேரம், 20 சதவீத அறிக்கைகள் 1,000 முறை கூட பதிவிறக்கம் செய்யப்படவில்லை. இனி குறைந்த எண்ணிக்கையில் கூட்டங்கள் நடத்தி, தரமான அறிக்கைகளை வெளியிடுவோம் என்றார்.

மாஸ்கோ

# 600 ஆண்டுகளுக்கு பிறகு வெடித்த எரிமலை

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் உள்ள க்ராஷென்னினிகோவ் எரிமலை சுமார் 600 ஆண்டுகளுக்குப் பிறகு வெடித்துள்ளது.

கடந்த வாரம் ரஷ்யாவில் பதிவான 7.0 ரிக்டர் அளவிலான பயங்கர நிலநடுக்கத்தின் தாக்கத்தாலே வெடித்திருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் வசிக்காத பகுதி என்பதால் பெரிய அளவிலான பாதிப்பு இல்லை என அந்நாட்டு அரசு விளக்கம் அளித்துள்ளது.

ரஷ்யா ரியா செய்தி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், “இது வரலாற்றில் பதிவான க்ராஷென்னினிகோவ் எரிமலையின் முதல் வெடிப்பாகும்" என்று தெரிவித்துள்ளது. இந்த எரிமலையின் கடந்த வெடிப்பு 1463ஆம் ஆண்டில் (40 ஆண்டுகள் முன்/பின் வேறுபாடு இருக்கலாம்) நடந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா அரசு தரப்பில் கூறுகையில், 6,000 மீட்டர் உயரம் வரை சாம்பல் மேகம் உயர்ந்துள்ளது. சாம்பல் மேகம் பசிபிக் கடலுக்கு நோக்கி நகர்ந்து வருவதால்,



மனித வசிப்பிடங்களுக்கு உடனடி அபாயம் இல்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த எரிமலை வெடிப்பிற்கு (Orange aviation alert ) ஆரஞ்சு அவியேஷன் அலார்ட் அளிக்கப்பட்டுள்ளது, இது விமான போக்குவரத்துக்கு அபாய அளவைக் குறிக்கிறது. எரிமலை வெடிப்புகளுக்கு மத்தியில், சுற்றியுள்ள பகுதிகளில் நில அதிர்வு செயல்பாடு தொடர்ந்தாக கூறப்படுகிறது.

சென்னை

# “விவகாரம் என்னாச்சு?”

இந்திய அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதே எங்கள் பணி என நடிகையும் தமிழக பா.ஜ.க. துணைத் தலைவருமான குஷ்பு அளித்துள்ள செவிவியில் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது என தமிழக பா.ஜ.க. துணைத் தலைவர் குஷ்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

மத்திய அரசின் விவசாயிகளுக்கான திட்டங்கள், பெண்களுக்கான திட்டங்கள், மாணவர்களுக்கான திட்டங்கள் என பல்வேறு தரப்பு மக்களுக்கான நல்ல திட்டங்கள் பிரதமர் மோடி தலைமையில் கொண்டு வரப்பட்டிருக்கு. இந்தத் திட்டங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதே எங்கள் பணி. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாக உள்ளது. கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய சம்பவத்துல அத்தனை பேர் இறந்து போனாங்க. அந்த வழக்கு என்னாச்சு? அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த பாலியல் விவகாரம் என்னாச்சு?.

தி.மு.க.வைப் பற்றிய உண்மைகளை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதும் எங்கள் பணிதான்.இவ்வாறு குஷ்பு கூறியுள்ளார்.

தமிழ்நாடு

# ஒருவர் மட்டுமே வாழும் கிராமம்



பாதுகாப்பின்மை, தண்ணீர் பஞ்சம் உள்ளிட்ட காரணங்களால் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நாட்டாகுடி கிராம மக்கள் அருகில் உள்ள பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருவதால், அங்கு ஒருவர் மட்டுமே வாழ்ந்து வருவதாக முன்னாள் மாநில பாஜக தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அண்ணாமலை தனது எக்ஸ் தளப் பதிவில், “5000 பேர் வாழ்ந்துவந்த நாட்டாகுடி கிராம், தற்போது ஒருவர் மட்டும் வாழும் கிராமமாக மாறியுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில், மத்திய அரசு ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு ரூ.4,835 கோடிக்கு மேல் வழங்கியுள்ளது, ஆனாலும், குடிநீராக்காக மக்கள் போராடும் நிலை உள்ளது.

நாட்டாகுடி கிராமத்தை உள்ளடக்கிய சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் உள்ள மாத்தூர் கிராம பஞ்சாயத்தில் அனைத்து வீடுகளுக்கும் 100% குழாய் நீர் இணைப்பை கொடுத்துள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இது நிர்வாகத் தோல்வி மட்டுமல்ல, துரோகம். இது முதல்வர் ஸ்டாலின் ஆட்சியின் நிர்வாக அலட்சியத்தின் வெளிப்படையான அடையாளமாகும்” என்றார்.



தேசிய விளையாட்டு விழாவில் கடினபந்து கிரிக்கெட்டில்

# மூன்றாமிடம் பெற்ற வடக்கு அணிக்கு வரவேற்பு

பூ.லின்ரன்

தேசிய விளையாட்டு விழாவுக்கான போட்டிகள் நடைபெற்று வருகின்ற நிலையில், ஆண்களுக்கான கடினபந்து கிரிக்கெட்டில் வரலாற்றில் முதல் தடவையாக வட மாகாண அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

குறித்த வட மாகாண அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் 12 பேரும், யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்த இரண்டு வீரர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தைச்சேர்ந்த ஒரு வீரரும் இடம்பிடித்திருந்தனர்.

குறித்த வீரர்களை வரவேற்கும் நிகழ்வு கிளிநொச்சி பஸ் நிலையத்திலிருந்து மத்திய கல்லூரி வரை இடம்பெற்றது.



# மட்ரிட்டிலேயே இருக்க விரும்பும் றொட்றிகோ

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான றொட்றிகோ, அக்கழகத்திலேயே தொடர விரும்புவதாகக் கூறப்படுகிறது.

மட்ரிட்டுடன் எதிர்வரும் 2028ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 24 வயதான றொட்றிகோவைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான லிவர்பூல், ஆர்சனல், டொட்டென்ஹாம் ஆர்வம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆசியக் கிண்ணத்துக்கான

# பங்களாதேஷ் குழாமில் நுருல் ஹஸன்



ஆசியக் கிண்ணம், நெதர்லாந்துக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடர்களுக்கான 25 பேர் கொண்ட ஆரம்ப கட்ட குழாமில் நுருல் ஹஸனை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை உள்ளடக்கியுள்ளது.

உள்ளூர்ப் போட்டிகளில் தொடர்ச்சியாக ஓட்டங்களைப் பெற்றபோதும் தேசிய அணியில் நுருலும், மொஸாடெக் ஹொஸைனும் அண்மைக் காலத்தில் தெரிவாகியிருக்கவில்லை.

இந்நிலையிலேயே தற்போது நுருல் உள்ளடக்கப்பட்டபோதும் மொஸாடெக் தெரிவாகவில்லை.

குழாம்: லிட்டன் தாஸ் (அணித்தலைவர்), தன்ஸிட் ஹஸன், நைம் ஷெய்க், சௌமியா சர்க்கார், பர்வீஸ் ஹொஸைன் எமொன், தௌஹிட் ஹிரிடோய், ஜாகிர் அலி, மெஹிடி ஹஸன் மிராஸ், ஷமிம் ஹொஸைன், நஸ்முல் ஹொஸைன் ஷன்டோ, ரிஷாட் ஹொஸைன், மஹெடி ஹஸன், தன்வீர் இஸ்லாம், நசும் அஹ்மட், ஹஸன் மஹ்மூட், தஸ்கின் அஹ்மட், தன்ஸிம் ஹஸன் சகிப், மொஹமட் சைபுடீன், நஹிட் ரானா, முஸ்தபிசூர் ரஹ்மான், ஷொரிஃபுல் இஸ்லாம், காலிட் அஹ்மட், நுருல் ஹஸன், மஹிடுல் இஸ்லாம், சைஃப் ஹஸன்.

# யுனைட்டெட் செல்ல விரும்பும் டொன்னருமா



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டுக்கு பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி டொன்னருமா செல்ல விரும்புகின்றார்.

இந்நிலையில், பரிஸ் ஸா ஜெர்மைனுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை 26 வயதான டொன்னருமா கொண்டிருக்கின்ற நிலையில் அவரின் நிலை குறித்து கூறுமாறு யுனைட்டெட் வினவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# லொஸ் ஏஞ்சலஸில் இணையவுள்ள சண்

ஐக்கிய அமெரிக்க கால்பந்தாட்டக் கழகமான லொஸ் ஏஞ்சலஸ் கால்பந்தாட்டக் கழகத்தில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான சண் ஹெயுங்க்-மின் ஏறத்தாழ 20 மில்லியன் ஸ்டேர்லிங்க் பவுண்ஸ்களுக்கு இணைவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயெர் லெவர்குசனிலிருந்து 2015ஆம் ஆண்டு டொட்டென்ஹாமில் இணைந்த சண், 454 போட்டிகளில் 173 கோல்களைப் பெற்றிருந்தார்,

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 06, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.